பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விழுயல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 19 செவ்வாய்க்கிழமை 04.08.2020 கதிர் 268

### இனி து ரகசியம் அல்ல!

இது தேர்தல் காலம். அதை ஒட்டிய ஒரு சுவையான தகவல் இது.

தேர்தல் காலத்தில் தேர்தல் திணைக்களத்திற்கு பல வாகனங்கள் தேவைப்படும். அதற்காக மற்றைய திணைக்களங்கள், அரச அலுவலகங்களில் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்கம்02

## கட்சிச் சின்னங்களுடன் பேனாக்கள் வேண்டாம்!

யாழ்ப்பாணம், ஓக. 04

கட்சிகளின் சின்னங்கள், வேட்பாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட பேனாக்களை வாக்காளர்களுக்கு விநியோகிக்க வேண்டாம் என கட்சிகளின் பிரதிநிதிகளிடம் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.சி.அமல்ராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கட்சிப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கேட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இம்முறை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் முகமாக வாக்காளர்கள் கறுப்பு அல்லது நீல நிற மை பக்கம் 02

## கொழும்பு துறைமுக நகரருகே புதிய குட்டித் தீவு!

கொழும்பு துறைமுக நகரத்துக்கு அருகில் கடற்பரப்பில் மணமேட்டை உருவாக்கி இன்னுமொரு துறைமுக நகரத்தை நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத்தின் பணிகள் இவ்வருடத்தின் இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது பக்கம் 02

## இலஞ்சம் வழங்கினால் எம்.பி. பதவி பறிபோகும்

### வேட்பாளர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் இலஞ்சம் வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள் என எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம். அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் நாடாளுமன்ற ஆசனங்களை இழக்க நேரிடலாம்.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் பக்கம் 02

# வன்முறைகள் அரங்கேறினால் பிறிதொரு நாளில் வாக்களிப்பு

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 04

வாக்களிப்பு மத்திய நிலையங்களில் பாரதூரமான சம்பவங்கள் இடம்பெற்றால் குறித்த பிரதேசத்துக்கான வாக்களிப்பு பிறிதொரு நாளில் நடத்தப்படும்.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். பக்கம் 02

## யாழ். படைத் தளபதிக்கு 8 ஆம் திகதி இடமாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 04

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவுக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் நாளை இடம்பெறவுள்ள நிலையில் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளபோதிலும் எதிர்வரும் 8 ஆம் திகதியே இந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரவுள்ளதாகக் கூறப்படுகின்றது. பக்கம் 02



## இன்று காலையில் வாக்குப் பெட்டிகள் உரிய வாக்களிப்பு நிலையங்களுக்கு!



கொழும்பு,ஓக.04

நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லும் பணிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் ஆரம்பமாகவுள் என என்று பக்கம் 02



## ஐ.தே.க.வேட்பாளர் மீது தாக்குதல்: நேரில் சென்று பார்வையிட்ட ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் டைட்டஸ் பெரேரா தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிகிச்சை பெற்றுவரும் அவரை பக்கம் 02

## தேர்தல் விதிமுறைகளை மீறுபவர்கள் கைதாகுவர்

கொழும்பு, ஓக. 04

தேர்தல் விதிமுறைகளை மீறிச்செயற்பாடுகளை முன்னெடுப்போர் எவராயினும் கைது செய்யப்படுவார்கள் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார். பக்கம் 02

## தனிமைப்படுத்தல் மையங்களில் தேர்தல் வாக்களிப்பு நடைபெறாது

கொழும்பு, ஓக.04

தனிமைப்படுத்தல் மையங்களில் வாக்களிப்பு இடம்பெறாது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அரச தகவல் மையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த நபர்கள், பொதுத்தேர்தலில் – ஓகஸ்ட் 5ஆம் திகதி – மாலை 4 மணிக்குப் பின்னர் வாக்களிக்கலாம்.

அதன்படி பக்கம் 02

## பதவி துறந்தார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா

### ராஜபக்ஷக்களின் கடும் அழுத்தங்களே காரணம் என ஆர்வலர்கள் குற்றச்சாட்டு



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து கலாநிதி தீபிகா உடுகம விலகியுள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை நேற்றுக் கூடிய அரசமைப்பு கவுன்சிலில் அவர் கையளித்தார்.

இதனை இலங்கை நாடாளுமன்ற ஊடகப் பக்கம் 02

## இனி இது...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்கள் தற்காலிக அடிப்படையில் சாரதிகளுடன் சேர்த்து வழங்கப்படுவது வழமை.

அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் தேர்தல் பிரிவுக்கு ஏனைய திணைக்களங்களின் பல வாகனங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒரு திணைக்களம் தனது அம்புலன்ஸ் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றது.

அதை வைத்து என்ன செய்வது என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தலையைப் போட்டுடைத்தனர். கடைசியாக நல்ல ஒரு வேலைக்கு அது ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவு உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கு அது வழங்கப்பட்டது. அதன் மூலம் பல விதிமுறை மீறல்களைக் கையும் களவுமாக மடக்கிப் பிடிக்க முடிவதாகஅதிகாரிகள் திருப்தி தெரிவிக்கின்றனர்.

தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பாக உடனுக்குடன் கிடைக்கும் முறைப்பாடுகளைக் கவனிப்பதற்காக 'பிக்கப்' அல்லது 'ஹயஸ்' வானில் சென்றால், அதன் முகப்புக் கண்டதுமே சம்பந்தப்பட்டோர் ஓடி ஒளித்து விடுகின்றார்கள்.

ஆனால், அம்புலன்ஸில் போனால் அத்தகையோர் அலட்டிக்கொள்வதில்லை. அம்புலன்ஸ்தானே வருகின்றது என 'அஸல்ட்டாக' இருந்து விடுகின்றார்கள். அதனால் அம்புலன்ஸில் போனால் சம்பந்தப்பட்ட விதிமுறை மீறலைக் கையும் களவுமாக மடக்க முடிகிறது என்ற திருப்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு.

தேர்தல் ஆணைக்குழுவின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு இந்த அம்புலன்ஸினால் அனுகூலம் அதிகமாம்...!

★ ★ ★

தேர்தல் திணைக்கள அதிகாரிகளின் அதிரடி முடிவுகளினாலும், திடீர் அறிவிப்புகளினாலும் பல வேட்பாளர்களுக்குப் பெரும் இழப்பு. அதனால் அவர்கள் இந்த அதிகாரிகள் குறித்து 'செம' கோபத்தில் இருக்கின்றார்களாம்.

கொரோனாத் தொற்றுப் பேரிடர் வந்ததும் எல்லோரையும் முகமூடி அணிய வற்புறுத்தினர் சுகாதார அதிகாரிகள். அதனை வசமாகப் பயன்படுத்தத் தீர்மானித்தனர் வேட்பாளர்கள்.

பல வேட்பாளர்கள் பல லட்சம் ரூபா கொட்டி, தங்களின் முகப்படங்கள், வேட்பாளர் இலக்கம் போன்றவற்றை எல்லாம் குறிப்பிட்டு முகக் கவசங்களைப் பல்லாயிரம் தயார் செய்தனர்.

அதை வாக்காளப் பெருமக்களிடம் – ஸ்ரீமான் பொதுஜனத்திடம் – அவர்கள் கையளிக்க இருக்கையில், அப்படி வேட்பாளரின் படங்கள், விருப்பு வாக்கு இலக்கங்கள் போன்றவை அச்சிட்ட முகக் கவசங்களுக்குத் தடை என்ற அறிவிப்பு வந்தது. அதனால் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு விட்ட லட்சக் கணக்கான முகக் கவசங்களையும் தேர்தல் வரையில் விநியோகிக்காமல் முடக்க வேண்டிய கட்டாயம் வேட்பாளர்களுக்கு. பல லட்சம் ரூபா செலவழித்தும் பிரசாரத் துக்கு அவற்றை விநியோகிக்க முடிய வில்லை என்ற கோபத்தில் அவர்கள் இருக்கின்றார்கள்.

இதற்கிடையில் கொரோனாத் தொற்றுப் பேரிடரைச் சமாளிப்பதற்காகத் தேர்தலுக்கு வாக்களிக்க வருபவர்கள் தத்தமது சொந்தப் பேனாக்களை எடுத்து வருவது நல்லது என்று முற்கூட்டியே அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பு வந்ததுமே உஷாரானார்கள் சில வேட்பாளர்கள்.

தமது படங்கள், வேட்பாளர் இலக்கங்கள் பொறித்த பேனாக்களைப் பல்லாயிரக் கணக்கில் தயார் பண்ணினார்கள் தேர்தலன்று வாக்களிக்கச் செல்வோருக்கு 'வாக்களிப்பதற்கான இலவசப் பேனா' என்று வழிமறித்துக் கொடுப்பது திட்டம் போலும்.

ஆனாலும் அதற்கும் ஆப்படித்து விட்டார்கள் தேர்தல் அதிகாரிகள். அப்படி வழங்குவது தேர்தல் விதிமுறை மீறல் என்று பணித்துள்ளார்கள் அவர்கள். அத்தகைய பேனாக்களை மக்களிடம் விநியோகிக்க வேண்டாம், அவற்றை வாக்குச் சாவடிக்கு எடுத்துவர அனுமதிக்க மாட்டோம் என்று தேர்தல் அதிகாரிகள் கூறிவிட்டனர்.

அதனால்பேனாக்களில்பெயர், முகம், வேட்பாளர் இலக்கம் போன்றவற்றைப் பொறிப்பதற்காக லட்சக் கணக்கில் ரூபாக்களை வேஸ்ட் பண்ணிய வேட்பாளர்கள் இப்போது கொதித்துப் போயுள்ளனராம்.

பாவம், அந்த வேட்பாளர்கள்...!

–மின்னல்–

## வன்முறைகள்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத் தேர்தலை ஜனநாயக முறையிலும் பாதுகாப்பான முறையிலும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் 100 சதவீதம் முழுமை பெற்றுள்ளன. வாக்காளர்கள் கொரோனா வைரஸ் தாக்கம் குறித்து அச்சம் கொள்ளாமல் வாக்களிக்கலாம். 80 சதவீதம் பேர் வாக்களிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

வாக்காளர்கள் கடந்த காலத்தைக் காட்டிலும் அறிவார்ந்தவர்களாக உள்ளார்கள். ஆகவே, வேட்பாளர்கள் தங்களின் இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள தேர்தல் சட்டத்தை முறையாகச் செயற்படுத்த வேண்டும்.

வாக்குகளை வெளியிடும் வரையில் பொதுத்தேர்தல் தொடர்பில் அனைத்து அதிகாரங்களும் தேர்தல்கள் ஆணைக் குழுக்குழுவுக்கு உண்டு. வாக்களிப்பு மத்திய நிலையங்களில் பாரதூரமான சம்பவங்கள் இடம்பெற்று வாக்களிப்பு தொடர்பான கேள்வி நிலை எழுந்தால் குறித்த பிரதேசத்துக்கான வாக்களிப்பு பிறிதொரு நாளில் நடத்தப்படும்.

வன்முறைகள் இடம்பெறாத அளவுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாருக்குத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளமை பல் துலக்குவதற்கு அல்ல. ஆகவே, ஜனநாயகத்தைப் பாதுகாக்க வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தலாம்.

எதிர்வரும் 5ஆம் திகதி வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். ஜனநாயக ரீதியில் வழங்கப்பட்டுள்ள உரிமையை முறையாகப் பயன்படுத்தி ஜனநாயகத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளுங்கள். வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் மறுநாள் 6ஆம் திகதி இடம்பெறும். அன்றைய தினமும் மறுநாளும் பாதுகாப்பு பலப்படுத்தப்படும்.

எந்தநிலையிலும் மோசடிகள் இடம்பெறாது. ஊடகங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சமூக வலைத்தளங்கள் தொடர்பான பொறுப்பை எமக்கு ஏற்க முடியாது. இருப்பினும் எல்லை மீறவும் முடியாது – என்றார்.

## தனிமைப்படுத்தல்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 நாள்கள் தனிமைப்படுத்தலை முடித்து விடுவிக்கப்பட்டவர்கள் புதன்கிழமை மாலை 4 மணிக்குப் பிறகு வாக்களிக்க முடியும்.

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த நபர்கள் குடும்பங்களுடன் வாக்குச்சாவடிகளுக்குச் செல்வதற்காக தங்கள் சொந்த போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தவேண்டும்.

கொரோனா தொற்றிலிருந்து மீண்ட நபர்களுக்கும் இதே செயல்முறை பொருந்தும். வீட்டுத் தனிமைப்படுத்தலின் முதல் 14 நாள்களில் உள்ளவர்கள் வாக்களிக்க முடியாது. – என்றார்.

## ஐ.தே.க.வேட்பாளர்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

வேட்பாளர் டைட்டஸ் பெரேரா மீது தாக்குதல் நடத்தியவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)

## இலஞ்சம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணம், சேலைகள், மதுபானம், அரிசி போன்றவற்றை வழங்குகின்றார்கள் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவர்கள் ஆதாரங்களுடன் பிடிபட்டால் இந்த விடயம் நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்படும். குறிப்பிட்ட வேட்பாளர்கள் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் அவர்களது ஆசனம் பறிபோகலாம்.

இதேவேளை, பெரும்பாலானவர்கள் யாருக்கு வாக்களிப்பது என ஏற்கனவே தீர்மானித்துள்ளதால் இலஞ்சம் வழங்கும் நடவடிக்கைகளால் தங்கள் முடிவுகளில் மாற்றங்களை எடுக்கமாட்டார்கள்.

எனினும், வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்க முற்படும் வேட்பாளர்கள் பகிரங்கமாக அம்பலப்படுத்தப்படுவார்கள் – என்றார்.

## கட்சிச் சின்னங்களுடன்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேனாக்களை வாக்களிக்க வரும்போது கொண்டுவருவது விரும்பத்தக்கது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிலையில் சில கட்சியினர் அல்லது கட்சி செயற்பாட்டாளர்கள் தற்போதே கட்சிச் சின்னங்கள் , வேட்பாளர்களின் பெயர்கள், இலக்கங்கள் பொறிக்கப்பட்ட பேனாக்களை வழங்குகின்றனர் என எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டு உள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு அந்தப்பேனாக்களை வாக்காளர்கள் கொண்டு செல்வது தேர்தல் விதிமுறை மீறலாகக் கருதப்படும், அதேவேளை மற்றைய கட்சி முகவர்களும் அது தொடர்பில் முறையிடுவார்கள். இதனால் தேவையற்ற சிக்கல்கள் ஏற்பட்டு நேர விரயமும் ஏற்படும்.

ஆகவே கட்சி சின்னங்கள், பெயர்கள், விருப்பிலக்கம் உள்ளிட்டவை பொறிக்கப்பட்ட பேனாக்களை வாக்காளர்களுக்கு விநியோகிக்க வேண்டாம்– என்றார்.

## கொழும்பு துறைமுக...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள துறைமுக நகரத்தின் பணிகளைத் துரிதப்படுத்தவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் தலைநகர் கொழும்பில் புதிதாக ஒரு நிலப்பரப்பு தோற்றம் பெறும்.

துறைமுக நகரம் மற்றும் புதிய துறைமுக நகரம் அபிவிருத்தி ஊடாக அதிக தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளவத்தை தொடக்கம் பத்தரமுல்லை வரையிலான படகு ஊடான போக்குவரத்து சேவையை நவீனமயப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.படைத்....
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு இடமாறிச் செல்லும் வணிக சூரிய தொண்டர் படையணியின் தளபதியாகப் பொறுப்பேற்கும் அதேவேளை, யாழ். மாவட்ட புதிய தளபதியாக தற்போதைய கிழக்கு மாகாணத் தளபதி செனரத் பண்டார நியமிக்கப்படவுள்ளார்.

தேர்தல் நிறைவடைந்து இரண்டு வாரங்களுக்குள் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்படவேண்டும். அதற்கு அமைவாக, இந்த இடமாற்றத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பதவி துறந்தார்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவு நேற்றிரவு வெளியிட்டுள்ள செய்தியில் உறுதி செய்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார் என அரசமைப்பு கவுன்ஸில் கூறியுள்ளது.

இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறந்த தரத்தைப் பேணுவதில் தீபிகா உடுகம வகித்த பங்கை அரசமைப்பு கவுன்ஸில் பாராட்டியுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக சட்டபீடத் துறைத் தலைவராக இருந்த கலாநிதி தீபிகா உடுகம, இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் அதிகாரத்திலுள்ள ராஜபக்ஷக்களின் கடும் அழுத்தங்களையடுத்தே அவர் பதவி விலகியுள்ளார் என்று மனித உரிமைகள் ஆர்வலர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

## தேர்தல் விதிமுறை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தல் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். இவ்விடயம் தொடர்பாக உரிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளோம்.

மேலும் தேர்தல் கடமையின்போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள், பொறுப்புகள், கட்டுப்பாடுகள் குறித்தும் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குமுறைகள் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபரினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்களை பின்பற்றுமாறும் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வலியுறுத்தி இருக்கின்றோம் – என்றார்.

## இன்று காலையில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்கெடுப்பை நாளை காலை 7 மணி முதல் ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 12,995 வாக்களிப்பு நிலையங்களில், ஒரு கோடியே 62 இலட்சம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். 7 ஆயிரத்து 452 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர். – என்றார்.

இதேவேளை, தனிமைப்படுத்தல் முகாம்களிலும், வீடுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள், தேர்தல் தினத்தன்று பிற்பகல் 4 மணி முதல் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

# தேர்தல் நாளன்று வன்முறைகளைக் கண்காணிக்கும் அதே நேரம் சுகாதார நடைமுறைகளையும் பொலிஸாரே கவனிக்க வேண்டும்!

## தேர்தல் கடமைகள் குறித்து அவர்களுக்கு விளக்கினார் பொறுப்பதிகாரி



(எஸ். நிதர்சன்)
யாழ்ப்பாணம்,ஒக.04

தேர்தல் விதி மீறல்களைத் தடுக்கும் அதே நேரம், கொரோனா தொற்று மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஏற்படாத வகையில் தேர்தல் கடமையில் ஈடுபடுமாறு, தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள பொலிஸாருக்கு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள பொலிஸாருக்கான விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு தேர்தல் கடைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், வழக்கமாக பொலிஸார் தேர்தல் விதிமுறை மீறல்கள், வன்முறைகளைக் கண்காணிப்பதற்கும், அவற்றைத் தடுப்பதற்கும் தான்கடமையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆனால், இம்முறை பொலிஸாராகிய நாங்கள் முக்கியமான கடமையினை முன்னெடுக்கவுள்ளோம். எமக்கு முன்னுள்ள பெரிய சவால் கொவிட்19 வைரஸ்.

வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் விதிமுறைகளை மீறுவோர் தொடர்பில் கவனஞ் செலுத்த வேண்டிய அதே நேரத்தில், மீண்டும் கொரோனா தொற்று ஏற்படாவண்ணம் மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் எம்மிடமுள்ளது. வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றச் செல்லும் பொலிஸார் மூன்று விடயங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வாக்காளர்கள் முகக்வசம் அணிந்து வருவதைக் கட்டாயமாக்க வேண்டும், கைகளைக் கழுவிய பின்னரே வாக்களிப்பு நிலையத்திற்குள் செல்ல அனுமதிக்க வேண்டும், அத்துடன் சமூக இடைவெளியை நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார்

## முன்னாள் சிறை அதிகாரி மறியலில்!

சிறைக்கைதிகளுக்கு வசதிகளை வழங்கியகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்ட நீர்கொழும்புமுன்னாள்சிறைச்சாலைஅதிகாரி அநுருத்த சம்பாயோ, இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பதில் உத்தியோகப்பற்றற்ற நீதவான் கே.ஜீ. குணசாசவினால் குறித்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், குருணாகலில் வைத்து நேற்றுமுன்தினம் அநுருத்த சம்பாயோ பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட பின்னர், அவர் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, நேற்று அவர் நீர்கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதும், குறித்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கைதிகளுக்கு வசதிகள் மற்றும் உதவிகள் புரிந்தமை தொடர்பில் நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரிகள் நால்வருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதில் மூவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்தனர். தற்போது நான்காம் நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைதிக் காலத்தில் பிரசாரம் எழுவைதீவில் முறுகல் நிலை!

(ந. லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஒக.04

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரைக்காலம் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்துள்ள போதிலும், நேற்று பரப்புரையில் ஈடுபட்ட இரண்டு கட்சிகளுக்கிடையில் முரண்பாட்டு நிலை தோன்றியிருக்கிறது. இந்தச் சம்பவம் எழுவைதீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

எழுவைதீவுப் பகுதியில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டோர் பரப்புரையில் ஈடுபட்டமையுடன், துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்துள்ளனர். அந்த நேரத்தில் அங்கு வந்த ஈ.பி.டி.பியினர் ஐ.தே.க. தொண்டர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையோடு, அவர்கள் வைத்திருந்த துண்டுப் பிரசுரங்களைப் பறித்து தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர்.

தேர்தல் விதி முறைகளை மீறி, இரு கட்சிகளும் அடாவடியில் ஈடுபட்டமை பொதுமக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பொது நூலகமும் கலாச்சார மண்டபமும் முல்லையில் இந்திய நிதிப் பங்களிப்பில்!

### இருபது கோடி ரூபா செலவில் அமையும்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,ஒக.04

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தியத் தூதரகத்தின் நிதிப் பங்களிப்பில் பொது நூலகம் மற்றும் கலாச்சார மண்டபம் என்பன அமைக்கப்படுவது தொடர்பில் தூதரக அதிகாரிகள் அங்கு நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நகரின் மத்துயில் உள்ள நீதிமன்றம் அருகில் பொது நூலகம் ஒன்று அமைக்கும் அதே நேரம் முள்ளியவளை யில் ஒரு கலாச்சரா மண்டபமும் அமைக்கப்பட வுள்ளது. இவ்வாறு அமைக்கப்படவுள்ள இரு பிரதான திட்டங்களிற்காகவும் இருபது கோடி ரூபா நிதியினைப் பங்களிக்க இந்தியத் தூதரகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இருதிட்டங்களையும்நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கடந்த வாரம் யாழில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் முல்லைத்தீவிற்கு பயணித்து இடங்களை பார்வையிட்டமையோடு மாவட்டச்செயலகத்திலும் கலந்துரையாடல்களை மேற் கொண்டிருந்தனர்.

இவ்வாறு இடம்பெற்ற கலந்துரையாடலில் இரு திட்டத்திற்கும் இணக்கம் தெரிவித்த இந் திய அதிகாரிகள் திருகோணமலைக்கும் முல்லைத்தீவிற்குமான போக்குவரத்தினை இலகு வாக்கும் நோக்கில் புல்மோட்டையில் பாலம் அமைப்பது தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர். இப் பகுதியில் 800 மீற்றர் நீளமான பாதை அமைக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

## சிந்தித்து வாக்களிக்க வேண்டும் வேலன் சுவாமிகள் கோரிக்கை



அனைவரும் அவசியம் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இது தொடர்பில் அவர் விடுத்திருக்கும் கோரிக்கை வருமாறு:-

2020 நாடாளுமன்றத் தேர்தலானது வடகிழக்கில் வாழும் தமிழ் உறவுகள் அனைவரும் தமது இருப்பிற்காக, நீதிக்காக தமது பலத்தை வெளிப்படுத்த வேண்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. தமிழ் மக்கள் இத்தேர்தலை நீண்டகாலக் கண்ணோட்டத்தில் உற்றுநோக்கி உங்கள் வாக்குரிமையை அறிவுபூர்வமாகவும் பொறுப்புணர்வோடும் பிரயோகிக்க வேண்டும்.

ஜனநாயக நாட்டில் இடம்பெறும் தேர்தல்களில் வாக்காளர்கள் யாவரும் வாக்களிக்க வேண்டியது தார்மீகக் கடமையும் உரிமையும் ஆகும். எனவே கொரோனாவிற்குப் பயந்தோ அல்லது 'யார் தெரிவு செய்யப்பட்டால் எமக்கு என்ன?' எனும் விரக்தியினாலோ வாக்களிக்காமல் இருக்க வேண்டாம். உங்களுக்குரிய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்துங்கள். மனச்சாட்சிப்படி சரியானவர்களை, சிந்தித்துத் தெரிவு செய்யுங்கள். தேர்தல் தொடர்பான நெறிமுறைகளைப் பின்பற்றி நடந்து கொள்ளுங்கள்.

நேரத்துக்கே காலையில் சென்று வாக்களியுங்கள். வாக்களிக்கச் செல்லும் போது சுகாதார நடைமுறைகளைச் சரியாகப் பின்பற்றுங்கள். அதேபோன்று ஏனையவர்களையும் வாக்களிப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

தேர்தல் நேர்மையாக, சுமுகமாக நடைபெறவும், அதன் மூலம் தமிழ் மக்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்படவும் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். - என்று தெரிவித்துள்ளார்.

## முன்பள்ளி ஆசிரியர்களைப் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வைத்தமை குறித்து விசாரணை!

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம்,ஒக.04

முன்பள்ளி ஆசிரியர்களைத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவைத்தமைதொடர்பில் திணைக்கள ரீதியான விசாரணைகளை முன்னெடுத்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளரிடம், மன்னார் மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரால் கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக் காலத்தில் முன்பள்ளி ஆசிரியர்களை ஓர் அரசியல் கட்சியின் பரப்புரைக் கூட்டத்திற்கு பாடசாலை விடுமுறை நாளில் சந்திப்பதற்கு ஏற்பாடுசெய்து கொடுத்தமையோடு அன்று மாதக் கொடுப்பனவுக்கான பட்டியலிலும் ஒப்பம் பெற்றதாகக் கூறப்படுவது தொடர் பிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு மேலதிகமாக, கல்வித் திணைக் களமும் அது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கு மாறு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களிற்கே 2 ஆயிரம் ரூபா பணமும் சேலையும் வழங்கியதான முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மனித உரிமைவாதியின் ராஜினாமா

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து கலாநிதி தீபிகா உடுகம விலகியிருக்கின்றார் என்ற அதிர்ச்சித் தகவல் நேற்று வெளியாகியிருக்கின்றது.

வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியில் இருந்து – அதாவது இன்னும் 27 நாள்களில் – அந்தப் பதவிலிருந்து அவர் விலகுகின்றார்.

நேற்று அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்துக்கே தமது ராஜினாமாக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார்.

அவரது இராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸில் அவரது இதுவரை காலமான மனித உரிமைகள் பேணும் நடவடிக்கைகளை மெச்சி விதந்துரைத்துப் பாராட்டியது.

நாட்டில் ராஜபக்ஷக்களின் கடும் அழுத்தங்கள் அதிகரித்துள்ள பின்னணியிலேயே அவர் பதவி விலகியுள்ளார் என சில தரப்புகள் குற்றம் சுமத்தினாலும் –

அவர் இந்தப் பதவிக்கு வந்து ஐந்து வருடங்களாகுகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டத்தின்படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களாக நியமிக்கப்படுவோரின் பதவிக் காலம் மூன்று வருடங்களாகும்.

தீபிகா உடுகம தமது இரண்டாவது பதவிக்காலத்தில் இன்னும் ஒரு வருடம் பதவி எஞ்சியிருக்கத் தக்கதாக – ஒரு வருடம் முன்பதாக – பதவியிலிருந்து விலகிச் செல்கின்றார்.

2005 – 2015 காலத்தின் இருண்டயுக ஆட்சியை நினைவுபடுத்திக் கலவரப்படுத்தும் ஆட்சிப் பீடம் மீண்டும் அரியணை ஏறும் சமயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்கின்றமை மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

மனித உரிமைகள் ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற சுயாதீனச் செயற்பாட்டாளர்களின் நியாயமான செயற்பாடுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என்று சில மனித உரிமை ஆர்வலர்களும் அமைப்புகளும் ஒன்று சேர்ந்து எச்சரிக்கை விடுத்திருக்கும் சமயத்தில் இந்த இராஜினாமா இடம் பெற்றிருக்கின்றது.

மனித உரிமைகளைப் பேணி, மேம்படுத்துவது தொடர்பான விடயங்களை நேரடியாகக் கையாண்டு, கவனிப்பதற்காக அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் சுயாதீன ஆணைக்குழு அமைத்துச் செயற்பட அனுமதிக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பிடத்தக்க அளவு அதிகாரத்துடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்விடயத்தைக் கையாண்டு வருகையில், இத்தகைய ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மையைப் பறித்து இல்லாமல் செய்யும் நோக்கமாக 19ஆவது அரசமைப்புத் திருத்தம் முற்றிலுமாக நீக்கப்படும் என ஆட்சியாளர்கள் உறுதியாகக் கூறியிருக்கின்றனர்.

நாளை நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் 19ஆவது திருத்தமே முழுவதுமாகக் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

அந்த நிலைமை ஏற்பட்டால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தனது சுயாதீன அதிகாரத்தை தொலைத்து விட்டு அல்லாடும் கட்டம் நேரும்.

அத்தகைய ஒரு நிலைமையை எதிர்கொள்ள விருப்பமின்றியோ, என்னவோ, நேரத்துடனேயே – இந்தத் தேர்தல் நடைபெற்று, அதன் முடிவுகள் வெளியாகி, புதிய அரசுத் தரப்புத் தனது அதிகார வலிமையை வைத்துக் கொண்டு 19ஆவது திருத்தத்தை நீக்கி, மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களின் தனித்துவத்தை இல்லாமல் செய்ய முன்னரே – தமது பதவியைத் தூக்கி எறிந்து விட்டுப் புறப்பட்டிருக்கின்றார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர்.

தேர்தலுக்குப் பின்னர் தற்போதைய அரசமைப்புக் கவுன்ஸிலிலே பெரும்பாலும் பல மாற்றங்களுக்கு உள்ளாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போது நியமிக்கப்படும் அரசமைப்புக் கவுன்ஸிலில் புதிய முகங்கள் பல இருக்கும்.

அந்த கவுன்ஸில்தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்க வேண்டியிருக்கும்

தேர்தலின் பின்னர் அதிகாரத்துக்கு வரக்கூடிய அரசமைப்புக் கவுன்ஸில் பெரும்பாலும் ராஜபக்ஷக்களின் அதீத செல்வாக்கைக் கொண்டிருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்போது நியமிக்கப்படக் கூடிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இப்போது இருக்கின்றவர்கள் – இருந்தவர்கள் – அளவுக்கு மனித உரிமையைப் பேணிப் பாதுகாப்பதில் உறுதியுள்ளவர்களாகவும் சுயாதீனமாகச் செயற்படுபவர்களாகவும் இருப்பார்களா?

காலம்தான் பதில் கூறவேண்டும்.

# மோ. சைக்கிள் மீதான இறக்குமதித் தடையை விலக்குமாறு விற்பனையாளர்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஓக.04

மோட்டார் சைக்கிள் இறக்குமதியை அரசாங்கம் இடைநிறுத்தப் பணித்துள்ளதால் வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரம் பேர் கடுமையாகப்பாதிக்கப்படவுள்ளனர். அதனால் அந்தத் தடையை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கை பதிவுசெய்யப்படாத இருசக்கர வாகன விற்பனையாளர் சங்கத்தின் வடமாகாண பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ். நகரில் உள்ள தனியார் விடுதியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நாட்டில் ஏற்பட்ட முடக்கநிலையால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி நிலையை அடுத்து, கடந்த மே மாதம் தொடக்கம்வாகன இறக்குமதியை அரசு இடைநிறுத்தியது. இந்த நிலையில் நாட்டில் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களையும் இறக்குமதி செய்வது அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதனால் மோட்டார் சைக்கிள் முகவர்களின் காட்சியறைகளில் மோட்டார் சைக்கிள்கள் முடிவடையும் நிலையில் அவை தற்காலிகமாக மூடப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அகில இலங்கைப் பதிவுசெய்யப்படாத இருசக்கர வாகன விற்பனையாளர் சங்கத்தின் வடமாகாணப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் இறக்குமதியை அரசு இடைநிறுத்தியுள்ளதால் அடுத்த ஒரு வாரத்துக்குள் மோட்டார் சைக்கிள் காட்சியறைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் விற்பனை முகவர்கள் 90 பேர், 300 பணியாளர்கள் மற்றும் அவர்களைத் தங்கி வாழ்வோர் என ஆயிரத்து 500 பேர் வடமாகாணத்தில் நேரடியாகப் பாதிக்கப்படவுள்ளனர். அத்தோடு வாகன சுத்திகரிப்பு நிலையங்களைச் சேர்ந்தோரென 3 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் பாதிக்கப்படவுள்ளனர். முகவர்கள் அனைவரும் வங்கிக் கடன்களை மீளச் செலுத்துவதில் பெரும் நெருக்கடி நிலையைச் சந்தித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் மோட்டார் சைக்கிள்களுக்கான கேள்வி அதிகரித்துள்ள போதும் அவற்றின் இருப்பு முடிவடைந்துள்ளது. எனவே மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதித் தடையை அரசு நீக்கவேண்டும். அதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசினால் அனுமதி வழங்கப்பட்டாலும் சாதாரண நிலைக்கு மீள்வதற்கு இரண்டு தொடக்கம் மூன்று மாதங்கள் ஏற்படும் என அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# 14 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓகஸ்ட் 04

கட்டாரின் டோஹாவிலிருந்து கப்பல் பணியாளர் கள் உட்பட 13 பேர் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இதேவேளை, ஜப்பானின் நரீட்டாவிலிருந்தும் ஒருவர் நாடு திரும்பியுள்ளார்.

இவ்வாறு வருகை தந்த விமானப் பயணிகள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்





யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 04

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் முன்னேற்பாடுகள் தொடர்பில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முறை,வாக்கெண்ணும் நடைமுறை போன்றவை தொடர்பான தொளிவூட்டல்கள் கலந்துரையாடலில் வழங்கப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

# தேர்தல் விதிமுறைகளை மீறுகின்றதாம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## கபே அமைப்புக் குற்றச்சாட்டுகின்றது

இலங்கைஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தேர்தல் விதிமுறைகளை கண்மூடித்தனமாக மீறுகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே குற்றம் சாட்டியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவிடம் கபே இது தொடர்பில் முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை அமைதிக் காலத்தில் தேர்தல் விதிமுறைகளை அப்பட்டமாக மீறுகின்றது என கபே தெரிவித்துள்ளது.

அமைதிக் காலத்தில் எந்த தேர்தல் பிரச்சாரத்தையும் முன்னெடுக்கக் கூடாது என்ற போதிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்குமாறு கோரும் பொதுஜன பெரமுனவின் பேருவளை அமைப்பாளர் மர்ஜான் பலீலின் குரல் மூல வேண்டுகோளை இலங்கை ஒலிபரப்புக. கூட்டுத்தாபனம் ஒலிபரப்பியுள்ளது என கபே தெரிவித்துள்ளது.

இது பொதுச் சொத்தினை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கை, இந்த தேர்தலில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேர்தல் விதிமுறைகளை மீறியது இது முதல. தடவையல்ல ஏற்கனவே நாங்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளோம் என கபே தெரிவித்துள்ளது.

அமைதிக் காலத்தில் தேர்தல் பிரச்சாரங்கள் குறித்த பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என கபே தெரிவித்துள்ளது.

## 141 வாக்களிப்பு நிலையங்கள் வவுனியா மாவட்டத்தில் அமைப்பு

வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 811 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில், அவர்களுக்காக 141 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட செயலகத்தினர் தெரிவித்தனர்.

வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குசீட்டுக்கள் மற்றும் வாக்கு பெட்டிகள் வழங்குவதற்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (உ – 100)

## தாய்க்குக் கொரோனாத் தொற்று; பிறந்த குழந்தைக்கு தொற்றில்லை

### பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதி

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ் தொற்று தாய் ஒருவருக்குப் பிறந்த குழந்தைக்கு வைரஸ் தொற்றுக் கிடையாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று தாய்க்குப் பிறந்த குறித்த சிசு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. நேற்று முன்தினம் அதன் பரிசோதனை அறிக்கை கிடைத்துள்ளது.

அதற்கிணங்க மேற்படி சிசுவுக்கு கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையில் முதலாவது கொரோனா வைரஸ் கர்ப்பிணித் தாய் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் சிசேரியன் முறையில் அந்தக் குழந்தை பிறந்ததுடன் விசேட மருத்துவர்கள் 35 பேர் அந்தச் சத்திர சிகிச்சையில் ஈடுபட்டனர். அந்தக் குழந்தைக்கு வைரஸ் தொற்று உள்ளதா என்பதை உறுதி செய்வதற்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

டுபாயிலிருந்து நாடு திரும்பிய மேற்படி கர்ப்பிணித்தாய் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலம் அவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டது.

அதையடுத்து மருத்துவர்களின் விசேட கண்காணிப்பின் கீழ் மேற்படி பெண் கடந்த 23ஆம் திகதி கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 24ஆம் திகதி குழந்தையை பிரசவித்துள்ளார். தாயின் தொற்று பிள்ளைக்குப் பரவாமல் தடுப்பது தொடர்பில் மருத்துவர்கள் மிகக் கவனமாக சிசேரியன் சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர்.

## சமூக ஊடகங்களில் தொடர்ந்தும் தேர்தல் பிரசாரங்கள் நீடிக்கின்றன

தேர்தலுக்கான அமைதிக்காலம் ஆரம்பமாகியுள்ள போதிலும் சமூக ஊடகங்களில் தொடர்ந்தும் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறுகின்றன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அமைதிக்காலத்தில் சமூக ஊடகத் தேர்தல் பிரசாரம் பல மடங்காக அதிகரித்துள்ளது எனத் தேர்தல் வன்முறைகளக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

சுதந்திரமான, நீதியான தேர்தல் இடம்பெறுவதை உறுதி செய்வது அனைத்து பொதுமக்களினதும் கடமை எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களைக் கண்காணிப்பதற்கான முழுமையான திட்டம் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்துள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கடந்த காலத் தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட கட்டுரைகள், ஆவணங்கள் போன்றவற்றை வேட்பாளர்களின் பிரச்சாரத்துக்காக அமைதிக்காலத் தில் பயன்படுத்துவதை அவதானிக்க முடிவதாகவும் தெரிவித்துள்ளது.

1006 தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன,நள்ளிரவுக்கு பின்னர் பல சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை சிறிய சம்பவங்கள் எனத் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

## அங்கொட லொக்கா இறப்பை உறுதிப்படுத்த இந்தியத் தூதரகத்தை நாடவுள்ள பொலிஸ்!

அங்கொட லொக்கா கோயம்புத்தூரில் உயிரிழந்தமை குறித்து வெளியாகியுள்ள தகவல்களை உறுதிப்படுத்த இந்திய தூதரகத்தின் உதவியை நாடவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் வெளிநாடொன்றுடன் தொடர்புபட்டுள்ளது என்பதால் இராஜதந்திர அணுகுமுறை பேணப்படும் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அங்கடலொக்கா கோயம்புத்தூரில் கொலை செய்யப்பட்டுள்ளார் என கோயம்புத்தூர் காவல்துறையினரை மேற்கோள் காட்டி இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த அங்கொட லொக்கா என்ற நபருக்கு உதவுவதற்காக போலியான ஆவணங்களை வழங்கிய மூவரை கைதுசெய்துள்ளதாக தெரிவித்துள்ள கோயம்புத்தூர் காவல்துறையினர் அங்கொட லொக்கா ஜுலை மாதத்தில் கோயம்புத்தூரில் இறந்துள்ளார், அவரது உடல் மதுரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளனர்.

மதுரையைச் சேர்ந்த ஆணும் திருப்பூரைசேர்ந்த பெண்ணும் அங்கொட லொக்காவிற்கும் அமானி தஞ்சி என்ற பெண்ணிற்கும் போலியான ஆவணங்களை வழங்கி உதவியுள்ளனர். இதன் மூலம் வெளிநாட்டவர்கள் கோயம்புத்தூரில் மறைந்திருப்பதற்கு உதவியுள்ளனர் என கோயம்புத்தூர் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த அமானி தஞ்சி, மதுரையைச் சேர்ந்த சிவகாம சுந்தரி, ஈரோட்டைச் சேர்ந்த தயனேஸ்வரன் ஆகியோரை இந்த விவகாரம் தொடர்பில் கைது செய்துள்ளதாகவும் அங்கொட லொக்கா பிரதீப் சிங் என்ற பெயரில் ஆதார் அட்டையை பெற்று இந்தியாவில் தங்கியிருந்தார் எனவும், இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

பீளமேடு பொலிஸ்நிலையத்துக்கு ஜுலை நான்காம் திகதி சென்ற சுந்தரி என்ற பெண் தனது உறவினரான பிரதீப் சிங் என்பவர் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார் என தெரிவித்துள்ளார். பிரதீப் சிங்கின் ஆதார் அட்டையை சமர்ப்பித்தார் எனவும் கோயம்புத்தூர் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடந்து இடம்பெற்ற விசாரணையின் போது காவல்துறையினர் ஆதார் அட்டை மோசடியை கண்டு பிடித்துள்ளனர். இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது உயிரிழுந்தவர் இலங்கையை சேர்ந்த அங்கொட லொக்கா என்பதும் அவர் கோயம்புத்தூரின் சேரன் மாநகரில் உள்ள கலப்பட்டி வீதியில் தஞ்சி என்ற பெண்ணுடன் தங்கியிருந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இதன் பின்னர் அங்கொட லொக்காவிற்கு போலி ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்த இருவர் குறித்த விவரங்கள் தெரிய வந்துள்ளன.

அங்கொட லொக்காவிற்கு இருதய வலி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து தஞ்சி அவரை ஜுலை மூன்றாம் திகதி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார், ஆனால் அங்கொட லொக்கா அங்கு உயிரிழந்துள்ளார்.

# வாக்களிப்புத் தொடர்பான புதிர்களும் பதில்களும்

- பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன், சமூகவியல் துறை,கிழக்குப் பல்கலைக்கழகம். -

கொரோனாவின் கைப்பிடிக்குள் மாட்டிக்கொண்ட நாடாளு மன்றத் தேர்தல் நடைபெறுமா? நடைபெறாதா? என்ற இழுபறிக்கு மத்தியில் சரியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை அது நடைபெறப்போகின்றது.

இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் சற்று வித்தியாசமானதான அமைவதனால் பல கேள்விக்கு மத்தியில் வாக்காளர்களும், வேட்பாளர்களும் காணப்படுகின்றனர். அவர்களின் கேள்விகளுக்கு பதிலைக் கொடுக்கும் விதத்தில் தான் இக்கட்டுரை அமைகின்றது.

**நடைபெறப்போகின்ற தேர்தலில் ஏன் வாக்களிக்க வேண்டும்?**

ஒவ்வொரு நாட்டு குடிமக்களுக்கும் இருக்கின்ற மிகப்பெரிய கடமை வாக்களிப்பதாகும். இந்த ஜனநாயக உரிமையினை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு குடிமகனும் வாக்களிக்க வேண்டும். அதுமட்டுமில்லாது வாக்காளன் அளிக்கும் வாக்கே அவனுடைய எதிர்காலத்தை தீர்மானிப்பதாய் அமைவதால் கட்டாயம் தனது வாக்கு உரிமையை அவன் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில்தான் வாக்காளர்கள் மிக அவதானத்துடனும், தெளிவுடனும் நடந்து கொள்வது அவசியமாகும். வாக்காளனின் வாக்கே வாக்காளரைக் காப்பாற்றும் என்பதை சிந்தனையில் கொள்ள வேண்டும். வேட்பாளர்களின் வாக்குறுதிகள் உங்களைக் காக்காது. குறிப்பிட்ட வேட்பாளரைத் தெரிவு செய்து அதிகாரத்தை கையளிப்பதற்கு முன்னர் அவரின் உண்மைத் தன்மை பற்றியும், அவருடைய தகுதி நிலை பற்றியும் ஆழமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும். ஜனநாயகம் என்பது வாக்காளர்களின் சுதந்திரத்திலும், சுதந்திரம் என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும் தங்கியுள்ளன. அரசியல்வாதிகள் காலத்திற்குக் காலம், கட்சி மாறலாம், கொள்கையை மாற்றலாம், தடம் மாறலாம். ஆனால் வாக்காளர்கள் எப்போதும், எவ்வேளையும் தடம் மாறவோ, குழப்பமடையவோ கூடாது. சரியானவருக்கு உங்கள் வாக்கை அளிப்பதன் மூலம் போலிகளைப் புறந்தள்ளிவிட்டு, ஆரோக்கியமானதொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு கட்டாயம் வாக்களித்தே ஆகவேண்டும்.

**நடைபெறப்போகின்றத் தேர்தலில் தொற்றிற்கு அச்சமின்றி வாக்களிக்க முடியுமா?**

புதன்கிழமை (05.08.2020) நடைபெறப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் எந்தவிதமான பயமும், அச்சமுமின்றி வாக்களிக்ககூடிய அனைத்து விதமான ஏற்பாடுகளையும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். தொற்று பரவலுக்கு மத்தியில் நாம் வீட்டிற்குள்ளேயே இருக்கின்றோமா? நிச்சயமாக இல்லை என்றுதான் கூறவேண்டும். சந்தைக்குச் செல்கின்றோம், நலம் விசாரிக்க உறவினர்களிடம் செல்கின்றோம், சுப மற்றும் துக்கம் விசாரிக்கச் செல்கின்றோம். மற்றும் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏனைய பல இடங்களுக்குச் செல்கின்றோம். இதேபோன்று வாக்களிப்பதற்கும் செல்ல வேண்டும். எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற பொறுப்பினை நாம் யாவரும் நிறைறேற்ற வேண்டும். தொற்றுப் பரவலுக்கு எந்த விதமான சாத்தியமும் இல்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**வாக்களிப்பு நிலையத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் எவ்வாறான ஏற்பாடுகள் முன்னடுக்கப்பட்டுள்ளன?**

மூன்று முறை தொற்றுநீக்கல்செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. கொரோனாத் தொற்று பரவுவதற்கான வாய்ப்பு வாக்களிப்பு நிலையத்தில இடம்பெறாது என்பதை வாக்காளர் ஒவ்வொருவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கச் செல்கின்ற வாக்காளர் மூன்று தடவை தொற்று நீக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றார். முதலாவது வாக்களிப்பதற்குச் நிலையத்திற்கு செல்கின்ற நுழைவாயிலில் கிருமித் தொற்று நீக்கப்பட்ட பின்னர்தான் உள்ளே அனுமதிக்கப்படுகின்றார். சரியான ஒரு மீற்றர் இடைவெளிப் பேணப்பட்டு வரிசையில் நின்று வாக்களிப்பு அறைக்குள் செல்லுகின்ற சந்தர்ப்பத்திலும் அவருடைய கைகள் தொற்று நீக்கலுக்கு இரண்டாவது தடவையும் உட்படுத்தப்படுகின்றது. இவ்வாறு வாக்களிப்பு அறைக்குள் அனுமதிக்கப்பட்டவர் தனது ஆள்அடையாள அட்டையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய அதிகாரிகள் மட்டும் தனது முகக்கவசத்தை அகற்றிக் காட்ட வேண்டும்.

உரிய அதிகாரி பரீட்சித்த பின்னர், கையில் மை பூசுகின்ற செயற்பாடும் முறையான சுகாதார நடைமுறையைப் பின்பற்றி செய்யப்படுகின்றது. எப்படியெனில் கடந்தகால தேர்தல்களில் பேனையினாலே மை பூசப்பட்டது. ஆனால் இம்முறை ஒவ்வொரு வாக்காளருக்கும் தனித்தனி மை பூசப்படும் குச்சி பயன்படுத்தப்படவுள்ளது. ஒரு வாக்காளருக்கு கையில் மை பூசப்பட்ட குச்சி இன்னொருவருக்குப் பாவிக்கப்படாமல் குப்பைத் தொட்டியில் வீசப்படுகின்றது. இவ்வாறு மை பூசுகின்ற செயற்பாடும் இம்முறை சற்று வித்தியாசமாக அமைகின்றது. வாக்காளர் கைவிரலை நீட்டிக்கொடுக்க வேண்டும்.இவ்வாறு மை பூசுமட்டும் கையை நீட்டி வைத்துக் கொள்வதற்கு சிரமமாக இருப்பவர்கள் அவர்களுக்கு அருகில் ரிசு வைக்கப்பட்டிருக்கும். வாக்காளர் அந்த ரிசுவினை தானே தனது கையால் எடுத்து மேசையின் மேல் வைத்து அதன் மேல் தனது கையை வைத்து மை பூச கொடுக்க வேண்டும். அவ்வாறு மை புசியவுடன் வாக்காளரே அந்த ரிசுவினை எடுத்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும். அதன் பின்னர் வாக்குச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு, தான் கொண்டு சென்ற கறுப்பு அல்லது நீலப் பேனையினால் (பேனை கொண்டு செல்லத் தவறியவர்களுக்கு தொற்று நீக்கிய பேனை வழங்கப்படும்) வாக்கினை அளித்துவிட்டு உரிய வாக்குபெட்டியில் போட்ட பின்னர் அவர் கைகள் மூன்றாவது முறையாகவும் கிருமி தொற்று நீக்கல் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது. இவ்வாறு மிகவும் சிறந்த பாதுகாப்பான மற்றும் சுகாதார நடைமுறைகள் வாக்களிப்பு நிலையத்தில் கடைப்பிடிக்கப்படுவதால் வாக்காளர் எந்தவிதமான அச்சமும் இன்றி தனது அடிப்படை உரிமையான வாக்களிக்கும் உரிமையினை பயன்படுத்த வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

**வாக்களிப்பு நிலையத்திற்கு செல்லும்போது எவ்வாறான நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும்?**

வழமையாக நடைபெறுகின்ற தேர்தலில் வாக்களிப்பதற்கு உத்தியோகப் பூர்வ வாக்காளர் அட்டை மற்றும் அடையாள அட்டையினை கொண்டு செல்வதே வழமை. ஆனால் இம்முறை நடைபெறுகின்ற தேர்தல் நடைமுறை சற்று வித்தியாசப்படுகின்றது. காரணம் கொரோனாத் தொற்று. இம்முறை வாக்களிப்பதற்குச் செல்லும் போது உத்தியாகப் பூர்வ வாக்காளர் அட்டை, அடையாள அட்டை, கறுப்பு அல்லது நீல நிற பேனை ஒன்று, முகக்கவசம் கட்டாயம் அணிந்து செல்ல வேண்டும், வாக்களிப்பு நிலையத்தில் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணல், தேவையற்ற பொருள்கள் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும், வாக்களித்த பின்னர் உடனடியாக வாக்களிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறல். இவ்வாறான நடைமுறையினை வாக்காளர் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, வாகன அனுமதி அட்டை, அரச ஓய்வூதிய அட்டை, முதியோர் அட்டை, மதகுருமாருக்கான அடையாள அட்டை, கிராம அலுவலரினால் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை ஆகிய ஏழு அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை மட்டும்



எடுத்துச் சென்றால் போதுமானது. மேலும் கொரோனா அறிகுறிகளான காய்ச்சல், இருமல், தொண்டைவலிமற்றும் சுவாச இடர்பாடுகள் என்பன தென்படுபவர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு பி.ப 4 மணி முதல் 5 மணி வரையான காலப்பகுதிக்குள் வாக்களிப்பதற்குச் செல்வது சிறப்பானதாக அமையும்.

**வாக்குச் சீட்டினை எவ்வாறு பயன்படுத்துவது?**

வாக்காளர் தங்களுக்கு வழங்கப்படுகின்ற வாக்குச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு மறைவிடத்திற்குச் சென்ற பின்னர் முதலாவது செய்ய வேண்டியது, தான் விரும்பும் அரசியற்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிராக இருக்கும் வெற்றுப் பெட்டிக்குள் புள்ளடியினை (X) இட வேண்டும். அதன்பின்னர் வாக்குச் சீட்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர் குறிக்கப்பட்ட ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று வேட்பாளரின் விருப்பு இலக்கம் காணப்படும் கூட்டில் உள்ள இலக்கங்கள் மீது புள்ளடியினை (X) இடுவதன் மூலம் தனது விருப்பு வாக்கினை அளிக்க முடியும். (மூன்று வேட்பாளரின் விருப்பு இலக்கங்களிற்கு மேல் வாக்கினை அளிக்க முடியாது) தனது விருப்பு வாக்கினை மூன்று வேட்பாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஒருவருக்கு கூட விருப்பு வாக்கினை அளிக்கலாம். அல்லது கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவிற்கு மட்டும் வாக்கினை அளித்து விட்டு விருப்பு இலக்கங்களுக்குத் தனது வாக்கினை அளிக்காவிட்டாலும் அந்த வாக்குச் சீட்டு செல்லுபடியானதாகக் கருதப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இவை தவிர வாக்குச்சீட்டில் ஏனைய வேறு வழிமுறைகளில் வாக்களிக்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது.

**தனிமைப்படுத்தப்பட்டோருக்கு ஏன் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப் பட்வில்லை?**

ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் வருந்தக்கூடிய ஒரு விடயம் கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகளில் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பவர்களுக்கும், தனிமைப்படுத்தும் நிலையங்களில் உள்ளோருக்கும் வாக்களிக்கின்ற உரிமை வழங்கப்படாமையே. இதற்கான காரணத்தினைப் பொதுமக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். இவர்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்குவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. ஏன் அனைவரும் கேட்ட கேள்வி அவர்களுக்கு நடமாடும் வாக்களிப்பு நிலையங்களினை

ஏற்பாடு செய்து அதன் மூலம் வாக்களிக்க முடியும் என்பதுதான். இவ்வாறான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். இருந்தாலும் பல சிக்கல்கள் உள்ளன. தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தால் எந்தவித குழப்பமும் ஏற்படாது. அவர்களுக்கு நடமாடும் வாக்களிப்பு நிலையத்தினை செய்திருக்கலாம். ஆனால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட அனைவரும் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவும், வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவும் காணப்படுவதால் இவர்கள் வாக்களித்தால் அந்த வாக்கினை மாவட்ட மற்றும் பிரதேச ரீதியானதாக வேறுபடுத்திக் கணக்கெடுப்பதில் பல சிக்கல்கள் உள்ளமையே ஆகும். இவற்றிற்கு மேலதிகமாக வாக்களிப்பு நடவடிக்கை சாதாரண வாக்களிப்பு



# வாக்களிப்புத் தொடர்பான புதிர்களும் பதில்களும்

நிலையம் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான வாக்களிப்பு நிலையங்களில் மட்டும்தான் நடைபெறவேண்டும். இவற்றிற்கு மேலதிகமாக வேறு இடங்களில் இட்பெற மாட்டாது. ஆனால் சாதாரண வாக்காளர்களைப்போல வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டவர்கள் தேர்தல் தினத்தன்று பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணிவரை வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தங்களது வாக்கினை அளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டள்ளது.

**வாக்களிப்பு முடிவடைந்து மறுநாள் வாக்கு என்னும் நடவடிக்கை தொடங்கப்படும் மட்டும் வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக இருக் குமா?**

ஆம்.நிச்சயமாக பாதுகாப்பாக இருக்கும். இதுவரையான காலங்களில் வாக்களிக்கும் செயற்பாடு நிறைவுற்றதும் இரவு 8 மணியளவில் வாக்கெண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். இதுதான் வழமை. ஆனால் இம்முறை கிட்டத்தட்ட 12 மணித்தியாலங்களுக்குப் பிறகுதான் வாக்கெண்ணும் அரச அலுவலர்களிடம் வாக்குப்பெட்டிகள் ஒப்படைக்கப்படவுள்ளன. இதுவரை வாக்குப்பெட்டிகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இம்முறை வாக்குப்பெட்டிகள் சாதாரண கார்ட்போர்ட் அட்டையால் தான் தயாரிக்கப்பட்டுள்ளன. வாக்கெடுப்பு நிறைவுற்றதும் இங்கிருந்து வாக்குப்பெட்டிகள் சீல் செய்யப்பட்டு, பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் வாக்கெண்ணும் நிலையத்திற்கு கொண்டு வரப்படும். இதன்பின்னர் கொண்டுவரும் வாக்குப்பெட்டிகள் மற்றுமோர் பெரிய கார்ட்போர்ட் பெட்டியில் வைத்து அது மூடப்பட்டு அந்தப் பெட்டி சீல் செய்யப்படும். உதாரணமாக வாக்களிப்பு நிலையத்தில் இருந்து 5 வாக்குப்பெட்டிகள் கொண்டு வரப்படும் போது இந்த 5 பெட்டிகளும் ஒரு பெரிய பெட்டியில் வைத்து சீல் செய்யப்படும். இதனைத் தொடர்ந்து மொத்தமாக சீல் செய்யப்பட்ட வாக்குப்பெட்டிகள் மேசை ஒன்றின் மீது வைத்து, வாக்குப் பெட்டிவைக்கப்படும் அறை முற்றாகப் பூட்டப்பட்டு சீல் செய்யப்படும். இவ்வாறு வாக்கெண்ணும் முழு வளாகமும் பொலிஸ், தேர்தல் கண்ணாணிப்பு அமைப்பின் உறுப்பினர்களாலும் மற்றும் கட்சி மற்றும், சுயேச்சைக் குழுக்களின் முகவர்கள் ஊடாக பாதுகாக்கப்படும். ஆகவே வாக்குப்பெட்டிப் பாதுகாப்பில் வேட்பாளர்களும், பொதுமக்களும் எந்தவிதமான அச்சமும் கொள்ளத்தேவையில்லை.

**மூன்று கட்ட வாக்கெண்ணும் பணி என்றால் என்ன?**

நாடாளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணும் பணிகள் மூன்று கட்டமாக இடம்பெறுகின்றது. எண்ணப்பட்ட வாக்குகள் மீண்டும் மீண்டும் மூன்று தடவை பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது என்று சில நேரங்களில் நாம் நினைக்கக்கூடும். அதுதான் தவறு. முதல்கட்ட வாக்கெண்ணும் பணி என்பது வாக்களிப்பு நிலையங்களில் வாக்குச்சீட்டு கொடுப்பவர் எத்தனை வாக்குச்சீட்டுகள் கொடுக்கப்பட்டது, எத்தனை வாக்காளர்கள் வாக்களிக்களிப்பதற்கு வந்தார்கள் என்பதனை கணக்கெடுத்து வைத்துக் கொள்வார். அவ்வாறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர்களிடம் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் வாக்குப்பெட்டிகளுக்குள் இருக்கின்ற வாக்குச் சீட்டுகளுக்குச் சமனாக இருக்கின்றனவா? என்பதை எண்ணி, கணக்கெடுத்து, பரீட்சித்துப் பார்க்கும் செயற்பாடே முதல்கட்ட வாக்கெண்ணும் பணியாகும். இரண்டாம் பட்ட வாக்கெடுப்பு என்பது வாக்குப்பெட்டிகளில் உள்ள வாக்குச் சீட்டுக்களில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குள் எண்ணப்படும் பணியாகும். எந்தக்கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்கள் எத்தனை வாக்குகளைப் பெற்றுள்ளன என்பதனைக் கணக்கெடுப்பது இரண்டாம் கட்ட வாக்கெண்ணும் நடவடிக்கை எனலாம்.

இந்தப்பணி முழுமையாக நிறைவுற்ற பின்னர்தான் மூன்றாம் கட்ட வாக்கெண்ணும் பணி ஆரம்பிக்கப்படும். இந்த வாக்கெண்ணும் பணியில் தான் விருப்பு வாக்குள் எண்ணப்படும். விருப்பு வாக்கு என்பது குறித்த கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கணக்கெடுப்பதாகும். அதாவது வேட்பாளர்களின் விருப்பிலக்கங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளைக் கணக்கெடுப்பதாகும். மூன்று கட்ட வாக்கெண்னும் பணியானது முழுமையாக நிறைவுற்ற பின்னர்தான் எந்தக்கட்சி அல்லது சுயேச்சைக்குழு அதிகூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது, அந்த கட்சியில் அல்லது சுயேச்சைக்குழுவில் போட்டியிட்ட வேட்பாளர்களில் யார் அதிக வாக்குகைளைப் பெற்று வெற்றி பெற் றுள்ளார் என்பது பற்றி முடிவுகள் வெளியிடப்படும்.

**வாக்கெண்னும் நடவடிக்கையின் போது வாக்குகள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பங்கள்?**

ஒவ்வொரு தேர்தலிலும் குறிப்பிட்டளவான வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன. இம்முறைத் தேர்தலில் 1,62,63,885 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (இம்முறை பொதுத்தேர்தலுக்காக 2019 ஆம் ஆண்டு பெயர்ப்பட்டியல் பயன்படுத்தப்படவுள்ளது) இவ்வாறு தகுதி பெற்ற ஒவ்வொரு வாக்காளரும் தமது ஜனநாயக உரிமையினை சரியாகப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தும் உரிமையினை ஒழுங்கான முறையில் செல்லுபடியான வாக்குகளாக மாற்றுவது வாக்காளர்களின் முக்கிய கடமையாகும். கடந்த காலங்களில் குறிப்பாக 1947 - 2015 வரை நடைபெற்ற பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகளவானதாக இருந்தது. இறுதியாக நடைபெற்ற (2015 ஓகஸ்ட் 17) 15 ஆவது பொதுத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 5,16,926 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதனை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. இவ்வாறு ஒவ்வொரு தேர்தலிலும் குறிப்பிட்டளவு வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2015 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளை மாவட்ட அடிப்படையில் எடுத்துப் பார்க்கும் போது தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் செறிவாக வாழும் மாவட்டங்களிலேயே நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் வீதம் அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

எவ்வாறு வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றது என்பதைப் பார்க்கம் போது, தாம் விரும்புகின்ற கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு கட்டாயம் வாக்களிக்க வேண்டும் அவ்வாறு வாக்களிக்காவிட்டால் அது நிராகரிக்கப்படும். மூன்றிற்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை ஒருவர் பயன்படுத்துதல். (ஆனாலும் அது கட்சிக்கு அல்லது சுயேச்சை குழுவுக்கு மட்டும் கிடைத்த வாக்காகக் கருதப்பட்டு எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும்.) வாக்குச் சீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு புள்ளடியிடல். அதேபோன்று ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிக்கும், மூன்றிற்கு மேற்பட்ட இலக்கங்களிற்கும் புள்ளடி இடல், வாக்குச் சீட்டில் ஒரு தெரிவும் இல்லாம் கீறிவிடப்படல், வாக்குச் சீட்டில் கையொப்பம் இடுதல் போன்ற பல காரணங்களினால் வாக்குகள் நிராகரிக்கப்படுகின்றன.

**கடமைகளில் ஈடுபடுத்தப்படும் அதிகாரிகள் தங்களது கடமைகளை சரியாக நிறைவேற்றுவார்களா?**

இம்முறை தேர்தல் கடமைகளில் பொலிஸ் உட்பட மூன்றரை இலட்சம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் நிச்சயமாக தங்களது கடமைகளை கட்டாயம் நிறைவேற்றியே ஆகவேண்டும் என்ற கட்டாயத்திற்குள் நிர்பந்திக்கபட்டிருக்கின்றார்கள். நடைபெறப்போகின்ற தேர்தலில் கொரோனாத் தொற்றினை காரணம்காட்டித் தங்களது கடமைகளில் இருந்து யாரும் தப்பித்துக்கொள்ளவோ, கடமைகளுக்கு சமுகமளிக்காமல் இருக்கவோ முடியாது. கட்டாயம் நியமனக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அனைவரும் கடமைகளுக்குச் சமூகமளித்தே ஆக வேண்டும். அதுமட்டுமில்லாது வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்கெண்ணும் அரச அலுவலர்கள் முறைதவறி செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உள்ளது. பெரும்பாலும் கட்சி மற் றும் சுயேச்சைக்குழு சார்ந்த முக்கிய சில பிரமுகர்கள் வாக்கெண்ணும் நடவடிக்கையினை கண்காணித்திருப்பாதாலும், ஏனைய அதிகாரிகள் தங்களது கடமைகளை சரியாகச் செய்வதாலும் தவறுகள் இடம்பெறா. கடமைகளில் இருந்து தவறுகின்ற அரச அலுவலர்களுக்கு எதிராக 3 ஆண்டு சிறைத்தண்டனை மற்றும் 1 இலட்சம் ரூபா வரையான தண்டப்பணம் அல்லது இரண்டு தண்டனையும் வழங்கப்படும். அதனை கருத்தில் கொண்டு அதிகாரிகள் சரியாகத் தங்களது கடமையை நிறைவேற்ற வேண்டும்.

ஆகவே தேர்தல் தொடர்பான பல கேள்விகளுக்கு இப்பத்தி மூலம் விடை கிடைத்திருக்கும். தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஆசனப் பகிர்வு எப்படி இடம்பெறும் என்பதைத் தனியான கட்டுரையில் பார்ப்போம்.

வாக்காளராகிய நாம் ஒவ்வொருவரும் எந்தவிதமான அச்சமும் இன்றி வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று எங்களின் வாக்கினை அளிக்கக்கூடியதான விதத்தில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அனைத்து ஏற்பாடுகளும் பூரணமாக செய்யப்பட்டுள்ளது. எங்கு எமக்கு தொற்று பரவிவிடுமோ என்ற அச்சத்தில் வாக்களிக்காமல் மட்டும் இருக்கக்கூடாது. வாக்களிப்பு நிலையத்தில் கிருமித் தொற்று ஏற்படுவதற்கான எந்தவிதமான வாய்ப்பும் இல்லை என்பதை வாக்காளர் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதுமட்டுமில்லாது ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் அளிக்கப்படுகின்ற ஒவ்வொரு வாக்குமே மிகப் பெறுமதியானதாகவும், வேட்பாளரின் வெற்றியினைத் தீர்மானிப்பவையாகவும் உள்ளது என்பதனை எவராலும் மறுக்க முடியாது.

# புதனன்று அச்சமின்றி வாக்களிக்க வாருங்கள் முகக்கவசம், ஒரு மீற்றர் இடைவெளி கட்டாயம்

## தேர்தல் ஆணையாளர் விசேட அறிவிப்பு

கொழும்பு, ஓக. 03

வாக்காளர்கள் எதிர்வரும் புதன்கிழமை எவ்வித அச்சமும் இன்றி வாக்களிக்க வர வேண்டும். முகக்கவசம், ஒரு மீற்றர் இடைவெளியைக் கட்டாயம் பேணி வாக்குச் சாவடிகளில் சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில்,

வாக்குச் சாவடிகளில் கொரோனா வைரஸ் பரவலுக்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. வாக்குச் சாவடிகளுக்குள் தொற்றுடன் வரவோ அல்லது வைரஸ் தொற்றுடன் வெளியேறவோ எவ்வித வாய்ப்புகளும் இல்லை.

வாக்குச் சாவடிகளுக்கு வரும் அனைவரும் கட்டாயம் முகக்கவசங்களை அணிந்திருக்க வேண்டும். கைகளையும் கழுவிக்கொண்டு வரவேண்டும். வாக்குச் சாவடியில் முதலாவதாகவுள்ள அதிகாரிக்கு முகக்கசவங்களை கீழிறக்கிவாக்காளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த முகத்தை காட்ட வேண்டும். பின்னர் மீண்டும் கைகளைக் கழுவ வேண்டும்.

அதன் பின்னர் கை விரலை மடித்து மை பூசிக் கொள்ள வேண்டும். ஒருமுறை மாத்திரமே மை பூசும் பேனை பயன்படுத்தப்படுத்தப்படும் என்பதால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வைரஸ் பரவலுக்கு வாய்ப்பு இல்லை. அதனால் வாக்காளர்களை அச்சமின்றி வாக்குச் சாவடிகளுக்கு வருமாறு கோரிக்கை விடுக்கின்றேன்.

முடிந்தால் கறுப்பு அல்லது நீளப் பேனையைக் கொண்டுவாருங்கள். இல்லாவிட்டால் நாம் தொற்று நீக்கப்படும் பேனைகளை வழங்குவோம். வாக்களிப்பதற்கான ஆவணத்தைக் கட்டாயம் அனைவரும் கொண்டுவர வேண்டும் – என்றார்.



# சர்வதேச அமைப்புகள் அரசை மிரட்ட முடியாது

## பரப்புரைக் கூட்டத்தில் மஹிந்தர் சண்டித்தனம்



கொழும்பு, ஓக. 03

ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் இலங்கையின் இறையாண்மையை மீறி அரசை மிரட்ட முடியாது. அந்த மிரட்டலுக்கு நாம் அடிபணியவும் தயாரில்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மீண்டும் புலிப்பயங்கரவாதம் தலைதூக்க இடமளியோம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்று ஒரு தீவிரவாதத் தாக்குதல் இங்கு மீண்டும் இடம்பெறத் சந்தர்ப்பம் வழங்கமாட்டோம். கடந்த நல்லாட்சிக் காலத்தில் இடம்பெற்றதுபோல் சர்வதேச அமைப்புகள் எமது நாட்டின் உள்விவகாரங்களில் மீண்டும் தலையிட அனுமதியோம்.

புதிய நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கொள்கைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதே எமது இலக்கு. அதற்காகவே மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசு அமைக்க மக்களின் ஆணையைக் கோரி நிற்கின்றோம்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக பிரதான எதிர்க்கட்சி இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்டுப் போட்டியிடுகின்றது. உங்கள் மதிப்புமிக்க வாக்குகளை அத்தகைய கட்சிகளுக்கு வழங்கி வீணாக்கக்கூடாது.

நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதைவிட ‘சிறிகொத்தா’ தலைமையகத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றப் போராடும் தனிநபர்களுக்காக உங்கள் வாக்குகளை வழங்காதீர்கள்.

ஒரு சிறந்த எதிர்காலத்துக்காக நாட்டை அபிவிருத்தி செய்வதற்குத் தயாராக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ’தாமரை மொட்டு’ சின்னத்துக்கே உங்கள் வாக்குகளைத் தவறாது வழங்குங்கள் – என்றார்.

# இது அமைதிக்காலம்

## பரப்புரைக்கு தடை விதிப்பு மீறினால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக. 03

நாடாளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவுற்றுள்ள நிலையில் இன்றும் நாளையும் அமைதிக்காலங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அமைதிக்காலத்தில் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இக்காலத்தில் வேட்பாளர்கள் பரப்புரை நடவடிக்கைகளைத் தவிர்த்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, அனைத்து வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைதிக்காலத்தில் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுபவர்களுக்கு எதிராகத் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்துள்ள மஹிந்த தேசப்பிரிய, அமைதிக்காலத்தில் பரப்புரைக் கூட்டங்களை நடத்துதல், கிராமங்களிலும் வீடுகளிலும் கூட்டங்களை நடத்துதல், வீடு வீடாகச் சென்று வாக்குகளைக் கேட்டல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் என்பவற்றுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் அறிவித்துள்ளார்.

அமைதிக்காலப் பகுதியினுள் அனைத்து அரசியல் கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் இவற்றைத் தவிர்த்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# தேர்தல் சட்டதிட்டங்களை மதிக்காத வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓக. 03

எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த வேட்பாளரும் தேர்தல் சட்டதிட்டங்களை மதிப்பதில்லை என்று தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, பதுளை தேர்தல் அலுவலகத்துக்குச் சென்றபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

பதுளை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் இந்திக அத்துருசிங்க உள்ளிட்டவர்கள், பதுளை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தாலும் இந்தப் பிரதேசத்தில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரும் தேர்தல் சட்டதிட்டங்களைப் பின்பற்றி, தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வேட்பாளர்கள் நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால், அவருக்கு வழங்கப்படும் தண்டனைகளுக்கு மேலதிகமாக 7 வருடங்களுக்கு அரசியல் தடை விதிக்க வேண்டும் – என்றார்.

# முதல் தடவையாக இம்முறையே ‘காட்போட்’ வாக்குப்பெட்டிகள்



கொழும்பு, ஓக. 03

நாளை மறுதினம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை வரலாற்றில் நடைபெறாத விடயங்களை நடத்த வைப்பதாக உள்ளது.

இத்தனை காலமும் இடம்பெற்ற தேர்தல்களில் மரப்பலகையினாலான வாக்குபெட்டிகளே பயன்படுத்தப்பட்டது. தேர்தல்கள் வரலாற்றில் முதற்தடவையாக ‘காட்போட்’ மட்டையிலான வாக்குப்பெட்டிகள் இத்தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளன.

நன்கு கனதியான கார்ப்போர்ட் மட்டைகளைக் கொண்ட வாக்குப்பெட்டிகள் கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரியில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களால் தயார் செய்யப்பட்டன. இவ்வாறு தயார் செய்யப்பட்ட பெட்டிகள் நாடளாவிய ரீதியில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக் கப்படவுள்ளன.

# இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சித் தகவல்லை இலக்கு வைக்கிறது சீன ராணுவ சைபர் தாக்குதல் பிரிவு

புதுடெல்லி,ஒக.04

சீன இராணுவத்தின் சைபர் தாக்குதல் பிரிவு இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி குறித்த தகவல்களைக் உளவு பார்த்து வருவதாக பாதுகாப்பு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்து உள்ளன.

சைபர் உளவுத்துறையில் அறியப்பட்ட சீன இராணுவத்தின் ரகசிய பிரிவு '61398' இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி தொடர்பான தகவல்களைக் சேகரித்து வருவதாக இந்திய பாதுகாப்பு நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. பாதுகாப்பு அமைப்புகளின் அறிக்கையின்படி, சீனா இராணுவத்தின் இந்த இரகசிய பிரிவு இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை தற்போது தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த சில மாதங்களில் சீனா இராணுவம் உடன் தொடர்புடைய சீன ஹக்கர்கள் சைபர் உளவு மூலம் நாட்டின் முக்கியமான தகவல்களைச்சேகரிக்க முயன்றனர் எனப் பல வழக்குகள் பதிவாகியுள்ளன.

சீனாவின் ஷாங்காயில் உள்ள புடாங் மாவட்டத்தின் டாடோங் அவென்யூவை தலைமையிடமாகக் கொண்டு, '61398' பிரிவு இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளது.

இது தொடர்பில் மத்திய பாதுகாப்பில் ஈடுபட்ட ஒரு அதிகாரி கூறியதாவது:-

'61398' பிரிவு மூலம், சீனா நீண்ட காலமாக உலகம் முழுவதும் இணையம், விண்வெளி மற்றும் புவிஇருப்பிட நுண்ணறிவு போன்ற தகவல்களை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பு இந்தியாவுக்கு எதிராக மிகவும் தீவிரமாக செயல்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது என்று கூறி உள்ளார்.

சமீபத்தில், இந்த ஹக்கர்களால் சைபர் உளவுத்துறையில் தீம்பொருள் கருவிகளை இணைப்பதன் மூலம் உலகளவில் ஒரு சிறப்பு கணினி நிரலை அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐஸ் பக், மறைக்கப்பட்ட லின்க்ஸ் (நிரலைப் பயன்படுத்தி ஒரு தொழில்முறை மேம்பட்ட தொடர்ச்சியான அச்சுறுத்தல்) மற்றும் ஏபிடி - 12 ஆகியவை சீன ஹக்கர்களால் அரசாங்க மற்றும் தொழில்துறை அமைப்பைத் தாக்க பயன்படுத்தப்படுகின்றன.

2015 முதல், பி.எல்.ஏ புதிதாக நிறுவிய சீன ராணும் மூலோபாய ஆதரவு படை (பி.எல்.ஏ.எஸ்.எஃப்)யின் கீழ் '61398' பிரிவு செயல்படுகிறது.

சைபர் உளவு நடவடிக்கைகளுக்கு குறைந்தபட்சம் மூன்று சைபர் ஹக்கர்கள் ஆதரவளிப்பதாக இதுகுறித்து அறிந்த மற்றொரு அதிகாரி கூறினார்.

2014 ஆம் ஆண்டில், அமெரிக்கா ஐந்து பி.எல்.ஏ இராணுவ அதிகாரிகள் உளவு பார்த்ததாக குற்றம் சாட்டியது, அவர்கள் '61398' பிரிவின் ஒரு பகுதியாக இருந்தனர்.



உலகெங்கிலும் இணைய உளவுப் பணியில் ஈடுபட்டுள்ள பி.எல்.ஏ. இன் தீவிர ஆதரவுடன் யூனிட் '61398' போலவே, இதுபோன்ற பல குழுக்கள் சீனாவில் உள்ளன என்று அமெரிக்க உளவு அமைப்புகள் நம்புகின்றன.

பல ஆய்வாளர்கள், போரின் போது முக்கியமான உள்கட்டமைப்பை வெற்றிகரமாக குறிவைக்கும் திறனை இப்போது சீனா கொண்டுள்ளது என்று நம்புகின்றனர். சைபர் தாக்குதல்கள் மூலம் சீன ஹக்கர்கள் மின்சார அமைப்பு மற்றும் வங்கி முறையை சீர்குலைக்கக்கூடும் என்ற கவலையும் உள்ளது.

# இந்தியாவில் கொரோனா தொற்றுச் சோதனை; இரண்டு கோடி எண்ணிக்கையைத் தாண்டியது!

புதுடெல்லி,ஒக.04

இந்தியாவில் கொரோனா பாதிப்புகளை உறுதி செய்வதற்காக நடத்தப்படும் பரிசோதனைகளின் எண்ணிக்கை 2 கோடியை கடந்துள்ளது.

நாட்டில் கொரோனா பாதிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வரும் வேளையில், குணமடைந்தோர் விகிதம் அதிகரித்து வருகிறது என ஆறுதல் அளிக்கும் வகையில் செய்தி வெளியாகி வருகிறது. இந்த நிலையில், மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவில் 52,972 கொரோனா பாதிப்புகள் இன்று உறுதி செய்யப்பட்டு உள்ளன. இதனால், மொத்த பாதிப்பு எண்ணிக்கை 18 லட்சத்து 3 ஆயிரத்து



696 ஆக உயர்ந்துள்ளது என தெரிவித்து உள்ளது.

இதுவரை 11 லட்சத்து 86 ஆயிரத்து 203 பேர் குணமடைந்து சென்றுள்ளனர். 5 லட்சத்து 79 ஆயிரத்து 357 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேற்று ஒரு நாளில் 771 பேர் பலியாகி உள்ளனர். இதனால், பலிஎண்ணிக்கை 38 ஆயிரத்து 135 ஆக உயர்ந்து உள்ளது என்றும் தெரிவித்து உள்ளது.

இதேபோன்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் நேற்று வெளியிட்ட செய்தியில், நாட்டில் ஒகஸ்ட் 2ஆம் திகதி வரையில் 2 கோடியே 2 லட்சத்து 2 ஆயிரத்து 858 கொரோனா பாதிப்புகளுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டு உள்ளன. இவற்றில் நேற்று முன்தினம் ஒரு நாளில் 3 லட்சத்து 81 ஆயிரத்து 27 பரிசோதனைகள்நடந்துள்ளனஎன்றுதெரிவித்து உள்ளது.

# சீன எல்லையில் புதிதாக இந்தியா படைக் குவிப்பு!



புதுடில்லி,ஒக.04

சீன அச்சுறுத்தலை எதிர்கொள்ள வடக்கு லடாக்கில் இந்தியா படைகளைக் குவித்து எல்லையை வலுப்படுத்தி வருவதாக, தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா - சீனா இடையே, சில மாதங்களாக, மோதல் போக்கு நிலவி வருகிறது. கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில், இரு நாட்டு இராணுவ வீரர்களும் மோதிக் கொண்டதில், 20 இந்திய வீரர்கள் பலியாயினர். வ்இரு தரப்பிலும்இராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலான நடந்த பல கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னர் இரு நாட்டு ராணுவமும், தங்கள் படைகளை, எல்லையில் இருந்து, திரும்ப பெற்று வருகின்றன.

# திருப்பூர் விபத்தில் மூவர் சாவு

திருப்பூர்,ஒக.04

திருப்பூர்அருகேஇருசக்கரவாகனம் மீது கார் மோதிய விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலே 3 பேர் பலியாகினர்.

திருப்பூர் பெள்ளிகாளிபாளையம் பகுதியில் சாலையில் சென்ற இருசக்கர வாகனம் மீது கார் மோதியது. இந்த விபத்தில் 3 பேர் பலியாகினர். இந்த காட்சிகள் அங்குள்ள சிசிடிவியில் பதிவாகி உள்ளது.

போலீஸ் விசாரணையில், அவிநாசியை சேர்ந்த கல்லூரி மாணவர்கள் கொடுவாயில் உள்ள நண்பர் வீட்டிற்கு சென்று திரும்பிய போது கார் கட்டுப்பாட்டை இழந்ததில், முன்னே சென்ற இரு சக்கர வாகனத்தில் மோதியது. அதில் சென்ற சாமிநாதன், பாப்பாத்தி ஆகியோர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததும், காரில் பயணித்த கல்லூரி மாணவர் ஒருவர் உயிரிழந்ததும் தெரிய வந்தது. காரில் இருந்த மேலும் 4 மாணவர்கள் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழகத்தில் ஒரே நாளில் 109 பேர் கொரோனாவினால் உயிரிழந்தனர்

தமிழகத்தில், புதிதாக 5 ஆயிரத்து 609 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி ஆகி உள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித் துள்ளது. இவர்களில், 32 பேர் வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து தமிழகம் திரும்பியவர்கள்.

இதுவரை,கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 63 ஆயிரத்தை தாண்டி உள்ளது. வைரஸ் தொற்றில் இருந்து, ஒரே நாளில் 5 ஆயிரத்து 800 பேர் குணமடைந்ததால், இது வரை நலமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்தை தாண்டியுள்ளது.

சென்னையில் 8 வயது சிறுமி, 17 வயது இளைஞர் உள்பட மொத்தம் 109 பேர், கொரோனாவுக்கு பலியாகி உள்ளனர்.

சென்னையில் புதிதாக ஆயிரத்து 21 பேருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்டு உள்ளது. திருவள்ளூரில் 332 பேரும், செங்கல்பட்டில் 331 நபர்களும், காஞ்சிபுரத்தில் 322 நபர்களும், புதிதாக கொரோனாவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதுதவிர, ராணிப்பேட்டையில் 382 பேர்களுக்கும், விருதுநகரில் 348 நபர்களுக்கும், தேனியில் 303 பேர்களுக்கும் புதிதாக வைரஸ் தொற்று உறுதியாகி உள்ளது.


# தமிழகத்தில் துப்பாக்கி கலாசாரம் பரவுவது குறித்து நீதிமன்றம் விசனம்

சென்னை,ஒக.04

தமிழகத்தில் துப்பாக்கி கலாசாரம் பரவி வருவது நல்லதல்ல என்று சென்னை உயர்நீதிமன்றம்வேதனைதெரிவித்துள்ளது.

உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கி வைத்துக் கொலை மிரட்டல் மற்றும் கொள்ளையடித்த வழக்கில் குண்டர் சட்டம் பதிவு செய்யப்பட்டது. அதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதி கிருபாகரன் அமர்வு பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. தமிழகத்தில் துப்பாக்கி கலாசாரம் மெல்ல மெல்லப் பரவி வருவதாகவும், அது நாட்டுக்கும், தமிழ்நாட்டுக்கும் நல்லது கிடையாது எனவும் கருத்து தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் சென்னை மாநகர காவல்துறை ஆணையரை எதிர்மனுதாரராகச் சேர்க்க உத்தரவிட்டுள்ள சென்னை உயர்நீதிமன்றம் உரிமம் இல்லாத நாட்டுத் துப்பாக்கிகள் பயன்படுத்துவதாக எத்தனை வழக்குகள் பதிவாகியுள்ளன? தமிழகத்தில் இதுவரை எத்தனை பேருக்கு துப்பாக்கி உரிமம் வழங்கப்பட்டுள்ளது? குண்டர்கள், கிரிமினல்கள், அரசியல்வாதிகள் துப்பாக்கி உரிமம் வைத்திருப்பது சரியல்ல. துப்பாக்கி கலாச்சாரம் பரவி வருவதை அரசு முழுமையாக தடுக்க வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது.



இது தொடர்பாக அரசு எடுக்கும் நடவடிக்கை குறித்து 2 வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ! 20ஆயிரம் ஏக்கருக்கு பரவியது



வொஷிங்டன்,ஒக.04

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 20 ஆயிரம் ஏக்கருக்கு பரவியுள்ள காட்டுத்தீயால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத் தப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள ரிவர்சைட் கவுண்டி என்ற வனப்பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் திடீரென காட்டுத் தீ ஏற்பட் டது. ஒரு சில மணி நேரங்களில் மளமளவென பரவிய தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

முதலில் சுமார் 700 ஏக்கர் பரப்பளவில் தீ பரவியதாக கூறப்படுகிறது. தீ விபத்து குறித்து தகவல் அறிந்து அங்கு வந்த தீயணைப்புத்துறை அதிகாரிகள், 1,300 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்களை கொண்டு காட்டுத் தீயை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தனர். ஆனா லும், தொடர்ந்து தீ கொழுந்து விட்டு எரிந்ததால் அந்த பகுதியே புகை மண்டலமாக காட்சியளிக்கத் தொடங்கி யது.

இந்த காட்டுத் தீக்கு ஆப்பிள் பயர் என பெயரிட்ட அதிகாரிகள், வனப்பகுதியை யொட்டி 2500க்கும் மேற் பட்ட வீடுகளில் வசித்த 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை, அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இந் நிலையில், ஏராளமான தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தியும் கட்டுக்கடங்காத காட்டுத் தீ, 20 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு பரவி உள்ளதாக வனத்துறை அதி காரிகள் தெரிவித்துள்ளனர். செங்குத்தான, கரடுமுரடான மலைப்பகுதிகளில் தீயணைப்பு வாகனங்கள், ஹெலி காப்டர்கள் அணுக முடியாதவையாக உள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சீன - நியூசிலாந்து உறவில் முறுகல்!



குற்றவாளிகளை நாடு கடத்தும் நியூசிலாந் துடனான ஒப்பந்தத்தைத் தற்காலிகமாக ரத்து செய்வதாக சீனா அறிவித்துள்ளது.

ஹொங்கொங் தொடர்பான சீனாவின் சட் டத்துக்கு நியூசிலாந்து கடும் எதிர்ப்பு தெரிவித் தது. மேலும் ஹொங்கொங்குடன் செய்த குற்ற வாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தத்தையும் கடந்தவாரம் தற்காலிகமாக ரத்து செய்தது.

இந்நிலையில், சீன தலைநகர் பெய்ஜிங் கில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென் பின் (Wang Wenbin), நியூசிலாந்துடனான ஒப்பந்தம் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவ தாக அறிவித்தார்.

எனினும், அந்த ஒப்பந்தம் சீனா - நியூசி லாந்து இடையிலானது அல்ல, ஹொங்கொங் - நியூசிலாந்து இடையிலானது என நியூசி லாந்து விளக்கமளித்துள்ளது.

## ஆப்கானில் சிறை தகர்ப்பு சண்டையில் 29 பேர் சாவு





ஆப்கானிஸ்தானில் சிறை தகர்ப்பில் ஈடுபட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகளுடனான சண்டையில் பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட 29 பேர் பலியாகினர். ஐம்பதுக் கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நங்கார்ஹர் மாகாண (Nangarhar) தலைநகர் ஜலாலாபாத்தில் (Jalalabad) உள்ள சிறையில் 2 ஆயி ரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அந்தச் சிறை வாயிலில் வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட காரை மோதி வெடிக்க செய்து நேற்று முன்தினம் மாலை 30 பேர் உள்ளே புகுந்தனர்.

இதையடுத்து இரவு முதல் இருதரப்புக்கும் இடையே சண்டை நடைபெற்றது. இந்த சண்டையில் 3 பயங்க ரவாதிகள் கொல்லப்பட்டனர் எனவும், பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட 21 பேர் பலியாகினர் எனவும் நங்கார்ஹர் மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று மதியத்துக்குப் பின்னர் சிறையைப் பாது காப்புப் படையினர் மீளக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலை நடத்திய ஐ.எஸ். தீவிரவாதி கள் சிறையில் இருந்த தலிபான்கள் இருவரைக் கொன் றனர் எனவும் கூறப்பட்டது.

## கொரோனாத் தனிமைப்படுத்தலுக்கு ஆஸ்திரேலியாவில் நிவாரண உதவி

ஆஸ்திரேலியாவில் கொரோனா தொற்றுக் காரண மாக பணிக்கு செல்ல முடியாத ஊழியர்களுக்கான நிவா ரண உதவியைப் பிரதமர் ஸ்கொட் மோரிசன் அறிவித்துள் ளார்.

அந்நாட்டில் மக்கள் தொகை அதிகம் கொண்ட 2 ஆவது மாநிலமான விக்டோரியாவில் கொரோனா பாதிப்பு அதிகரித் துள்ள நிலையில், 6 வார கால அவசர நிலை பிரகடனப்படுத் தப்பட்டு உள்ளது.

சில்லறை கடைகள் செயல்பட, கட்டுமானப் பணிகளைத் தொடரவும், உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளவர்களுக்கு இந்திய மதிப்பில் 80 ஆயிரம் ரூபா நிவாரணம் அறிவிக்கப்பட்டுள் ளது.

### நாகசாகியில் உயிர்தப்பிய 13 வயது சிறுவன்

## அணு ஆயுதம் இல்லா உலகிற்காக 75 ஆண்டுகளாகப் போராட்டம்!

ஜப்பான் நாகசாகியின் அணுகுண்டு தாக்குத லில் இருந்து உயிர் தப்பிய ஒருவர், அணு ஆயு தம் இல்லா உலகிற்காக 75 ஆண்டுகளாகப் போராடி வருகிறார்.

1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9 ஆம் தேதி நாக சாகியில் அணுகுண்டு தாக்குதல் நடந்த போது 13 வயதான தெருமி தனகா வீட்டின் கீழ் தளத் திற்கு சென்று பதுங்கி உயிர் தப்பினார்.

அணுகுண்டு வெடிப்பிலும் அதை தொடர்ந்த அணுகதிர் வீச்சிலும் உறவினர்கள், அண்டை வீட்டாரர்கள், நண்பர்கள் பலரை இழந்ததை யும் தான் சந்தித்த பொருளாதார இன்னல்களை யும் சர்வதேச மாநாடுகளில் நினைவுகூர்ந்து, அணு அயுதங்களுக்கு எதிராக தனகா பிரச்சாரம் செய்து வருகிறார்.

ஐ.நா.வின் அணு ஆயுத தடை ஒப்பந்தத்தி ன் ஆதரவாளரான இவர், நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் அணுகுண்டு கண் காட்சியை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## அமெரிக்காவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட முதல் நாய் மரணம்



அமெரிக்கவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட முதல் நாய் மரணமடைந் ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் நியூயார்க் நகரில் ஜெர்மன் ஷெப்பர்ட் நாய் ஒன்றுக்கு கொரோனா பாதிப்பு இருந்தது தெரிய வந்தது. கடந்த மூன்று மாதங்களாக இந்த நாய் உயிருக்கு போராடி வந்தது.

நியூயோர்க் நகரைச் சேர்ந்த ராபர்ட் மகானே மற்றும் அலிசன் தம்பதி 7 வய தான இந்த ஜெர்மன் ஷெப்பர்ட் நாயை வளர்த்து வந்தனர். ராபர்ட் மகானேவுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர் வழியாக நாய்க்கும் பரவியிருக்க லாம் என்று நம்பப்படுகிறது.

அமெரிக்காவில் கொரோனா பாதித்த முதல் நாய் இதுதான். கொரோனா பாதிப்பு காரணமாக நாய் மூச்சு விட சிரமப்பட்டது. இந்த நாய்க்கு சிகிச்சை யளிக்க இரு கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

கொரோனாவிலிருந்து மீண்டு விடு மென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் நாய் அண் மையில் இறந்து போனதாக அலிசன் மகானே தெரிவித்துள்ளார். இறக்கும் முன் அது ரத்த வாந்தி எடுத்ததாகவும் அலிசன் கூறியுள்ளார்.

ஆனால், இந்த நாய்க்கு புற்று நோய் பாதிப்பு இருந்ததாகவும் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். அமெ ரிக்காவில் 12 நாய்கள், 10 பூனைகள், புலி மற்றும் சிங்கம் ஒன்று ஆகியன கொரோனா வைரஸ் நோயால் பாதிக் கப்பட்டுள்ளன.

# 80 வீத வாக்குப் பதிவு இம்முறை நடக்குமாம்

## தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நம்பிக்கை



2020 நாடாளுமன்றத் தேர்தலில் 80 - 85 விகிதமான வாக்குப் பதிவு எதிர்பார்க்கப்படுகிறது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அனைத்து வாக்குச் சாவடிகளிலும் சுகாதாரப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். மேலும் வாக்களிக்கத் தகுதி பெற்ற அனைவரின் பாதுகாப்புக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்தோடு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் இராணுவத் தளபதியால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்களைப் பெற்று பொதுத் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்கப்படவில்லை என்றால் அதுதொடர்பாக தொழிலாளர்கள் அமைச்சிற்கு எழுத்து மூலமான முறைப்பாட்டினை வழங்க முடியும் என்றும் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

# அதிரடியாக நீக்கப்பட்டன பத்து தேர்தல் அதிகாரிகள்

கொழும்பு, ஒகஸ்ட் 04

தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் 10 பேர் நீக்கப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி ரோஹன புஷ்பகுமார நேற்று தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள் சார்பில் பரப்புரை நடவடிக்கையில் ஈடுப்பட்டமை கண்டறியப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நீக்கப்பட்ட அதிகாரிகளுக்குப் பதிலாக நியமிப்பதற்குப் போதுமான அதிகாரிகள் தம்மிடம் உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பரப்புரை நடவடிக்கையில் ஈடுபட்ட குறித்த 10 சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.கவின் தேர்தல் அலுவலகம் மீது கிருலப்பனையில் நேற்றுத் தாக்குதல்



நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர் ரைட்டஸ் பெரேராவினுடைய கொழும்பு, கிருலப்பனையில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகம் மீது நேற்றுத் திங்கட்கிழமை காலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (CMEV) தெரிவித்திருக்கின்றது. இதன்போது அலுவலகத்தில் இருந்தவர்களும் தாக்கப்பட்டுள்ளனர்.

இனந்தெரியாத குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகவும், இத்தாக்குதலில் அலுவலகம் பலத்த சேதமடைந்ததுடன், அங்கிருந்த இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தரம் 01 இல் மாணவர்கள் அதிகரிப்பு; கிடைத்தது சட்டமா அதிபர் அனுமதி!

அடுத்த வருடம் முதல் தரம் 1 இல் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான அனுமதியை சட்டமா அதிபர் திணைக்களம், கல்வி அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சால் ஆசிரியர் உதவியாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் அறிவுறுத்தலுக்கு அமைய, இது தொடர்பில் பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதானிகளுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த அறிவித்துள்ளார்.

அதேவேளை, தரம் 1 இற்கு ஒவ்வொரு வகுப்பிற்கும் ஆசிரிய உதவியாளர்கள் 02 பேர் நியமிக்கப்படவுள்ளார்கள். அத்துடன் தரம் 03, 04, 05 களுக்கு தலா ஒருவர் வீதம் நியமிக்கப்படுவார்கள். பொதுத் தேர்தலுக்குப் பின்னர், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி ‘காலைக்கதிர்’ நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2020

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விபரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. சிவ வடிவங்கள் எவை?**

.......................................................................................

**2. யோகர் சுவாமிகளுக்கு ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், நாம் அறியோம், முழுதும் உண்மை ஆகிய நான்கு மகா வாக்கியங்களைப் போதித்த அவரது குருநாதர் யார்?**

.......................................................................................

**3. முருகப் பெருமானின் திருவிளையாடல்களை விளக்கும் தமிழ்க் காவியமான கந்தபுராணத்தை இயற்றியவர் யார்?**

.......................................................................................

**4. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக விளங்கிய நல்லூரைச் சூழ நாற்புறமும் காணப்பட்ட சைவ ஆலயங்கள் எவை?**

.......................................................................................

**5. குக்குடம் என்றால் என்ன?**

.......................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 17.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

02

பங்குபற்றுபவர்களின் விபரங்கள்:-

1. முழுப் பெயர் :......................................................
2. பிறந்த திகதி :......................................................
3. கல்வி கற்கும் தரம் :..............................................
4. பாடசாலை :......................................................

..........................................
கையொப்பம்







வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவ திருமஞ்ச திருவிழா நேற்று மாலை சுகாதார நடைமுறைகளுடன், பக்தி பூர்வமாக இடம்பெற்றது. சிறந்த கலையம்சங்களும் சிற்பங்களும் அமையப் பெற்ற அழகிய மஞ்சத்தில், வள்ளி, தெய்வயானை சமேதரராக முத்துக்குமார சுவாமி அடியார்கள் புடைசூழ எழுந்தருளினார்.

படங்கள் :-
ஐங்கரன் சிவசாந்தன்



# இறம்பொடை சின்மயாமிஷன் முகாமையாளர் மீது தாக்குதல்



இறம்பொடை ஆஞ்சநேயர் கோவிலிலுள்ள சின்மயாமிஷன் கிளையின் முகாமையாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் காயமுற்ற அவர் கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த முகாமையாளருக்கு எதிராக இந்து அமைப்புகளும், தன்னார்வ நிறுவனங்களும் பல குற்றச்சாட்டுகளைச் சான்றுகள் சகிதம் முன்வைத்தும், சின்மயா மிஷன் ஆன்மீக நிறுவனத்தின் இலங்கை கிளை எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என பரவலாக விசனம் வெளியிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி முகாமையாளரின் ஒழுக்கமற்ற செயற்பாட்டால் பாதிக்கப்பட்ட நபரொருவர் நேற்று மாலை அவரைக் கடுமையாக தாக்கியுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மலையக மக்களுக்கு ஆன்மீக சேவையாற்றும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட சின்மயாமிஷன் நிறுவனம் ஆரம்பத்தில் சிறப்பாக செயற்பட்டாலும் தற்போது திசைமாறி பயணிப்பதாக இந்து குருமார்கள் அண்மையில் குற்றச்சாட்டியிருந்தனர். இது தொடர்பில் மலையக இந்து அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், சின்மயாமிஷன் நிறுவனத்தின் இலங்கைக்கிளை உறுப்பினர்களுக்குமிடையில் ஜுன் 14 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின்போது கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. கடும் சொற்போரால் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் கூட்டம் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஸ்கெலியா பிரதான வீதியில் ஒரே மரத்தில் 11குளவி கூடுகள்

மஸ்கெலியா பிரதான வீதியில் றொக் கூட் பகுதியிலுள்ள பாரிய வாகை மரத்தில் 11 குளவி கூடுகள் காணப்படுகின்றன.

மலைநாட்டில் தற்போது நிலவிவரும் மழையுடனான சீரற்ற காலநிலை மற்றும் கடும் காற்றால் மரத்தின் கிளைகள் முறிந்து விழுந்தாலோ அல்லது கிளைக்கு கிளை மோதுண்டாலோ குளவிக் கூடுகள் கலையும் அபாயம் உள்ளது.

தொழிலாளர்கள் தேயிலை மலையில் வேலைசெய்யும்போது இவ்வாறு நடைபெற்றால் அவர்களைக் குளவிகள் கொட்டக்கூடும். அவ்வீதியூடாக செல்பவர்களுக்கும் ஆபத்து காணப்படுகின்றது.

ஆகையால் சம்பந்தப்பட்ட நல்ல தண்ணி வனத்துறையினர் இந்த குளவி கூடுகளை அகற்ற முன்வருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். முக்கியமாக இவ்விடத்தில் அதிகளவு மக்கள் பஸ்ஸிற்காக காத்து நிற்கின்றமையையும் காணக்கூடியதாக உள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள **Green Media House Pvt Ltd** நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.08.2020 இல் வெளியிடப்பெற்றது.